*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 12, Issue 03 (August-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12032026*

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Peer-Reviewed | Open Access | Crossref | Google Scholar
SJIF Impact Factor3.5| Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm12032026.01

# Historically Significant Anandur

## (Based On Archaeological Evidence)

**M. Sneka*, Dr. G. Mythili*,**
[1]Ph.D, Research Scholar, Department of Tamil, Periyar University, Salem – 636 011.
ORCID : https://orcid.org/0009-0004-5815-2557
[2]Professor, Department Of Tamil, Periyar University, Salem – 636 011.
Email Id : mythili.dhanapal@gmail.com, Tel: Mobile No : 9994385788.
ORCID : https://orcid.org/0000-0001-6255-3223
*Corresponding Email: snekanandha45@gmail.com, Tel: 9360280820

**Article Info**
Received on 24-July-2026, Revised on 24- July-2026, Accepted on 25- July-2026, Published on 01-Aug-2026

## ABSTRACT

The Tamils, who held valor in high esteem, honored Warriors Who achieved victory Without ever turning their backs on the battlefield. If a warrior laid down his life in battle, a hero stone Was erected to commemorate his bravery and honor his memory. Wishing to pay tribute to the fallen warrior – to behold his glory and sing his praises – others carved his mortal form into stone, immortalizing him forever. Beyond merely carving the Warrior's figure, they also inscribed his heroic deeds onto the stone in enduring script. Krishnagiri district stands as a historically significant region rich in archaeological evidence. The hero stones found in the Anandur area exemplify the traditions of valor, warfare tactics, cattle protection, and social culture of the times. Notably, there is evidence reflecting the influence the Gangar, Nolambas, Chola and Vijayanagara dynasties. Furthermore, an inscription belonging to a merchant guild from the reign of kulothunga cholas III serves as key evidence of the thriving trade organizations in the area. A clear transition in artistic style – shifting Nolambas tradition to the cholas style – is also evident in these hero stones. This study examines the archaeological evidence found in Anandur from a historical perspective, highlighting the social, political, economic and cultural insights they reveal.

**Keywords:** *Anandur, Krishnagiri, Hero stones, Nolambas, Cholas, Vijayanagara Empire, Archaeology, Art style, Inscriptions.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 03 (August-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

# வரலாற்றுச் சிறப்புமிக்க ஆனந்தூர் (தொல்லியல் சான்றுகள் அடிப்படையில்)

**[1]மூ. சினேகா,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர் , தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம், சேலம்- 636 011
மின்னஞ்சல் முகவரி : snekanandha45@gmail.com
அலைபேசி எண் : 9360280820.
ORCID : https://orcid.org/0009-0004-5815-2557
**[2]முனைவர் க. மைதிலி,**
பேராசிரியர், தமிழ்த்துறை, பெரியார் பல்கலைக்கழகம் , சேலம் - 636 011
மின்னஞ்சல் முகவரி : mythili.dhanapal@gmail.com, அலைபேசி எண் : 9994385788.
ORCID : https://orcid.org/0000-0001-6255-3223

**ஆய்வுச் சுருக்கம்**

வீரத்தைப் போற்றிய தமிழர்கள் போர்க்களத்தில் புறங்கொடாமல் போர்ச் செய்து வெற்றிப் பெற்ற வீரனைப் போற்றினார்கள். வீரன் போர்களத்தில் உயிர்நீத்தால்,அவன் வீரத்தைப் போற்றுவதற்காகவும், அவனை நினைவு கூறுவதற்காகவும் நடுகல் எடுத்தனர். மடிந்த வீரனின் புகழைக் கண்ணாரக் கண்டு வாயார வாழ்த்தி மரியாதை செலுத்த கருதிய ஏனையோர்கள் அவனின் அழிந்த உடம்பை என்றும் அழியாத ஒன்றாக கல்லில் செதுக்கி வைத்தனர். வீரனின் உடலை கல்லில் செதுக்கவதோடு அமையாது, அவன் பெருமைகளை அக்கல்லில் அழியா எழுத்தாகப் பொறித்தும் வைத்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம் தொல்லியல் சான்றுகள் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதியாக திகழ்கின்றது. ஆனந்தூர் பகுதியில் காணப்படும் நடுகற்கள் வீரமரபு, போர்முறை, கால்நடைப் பாதுகாப்பு மற்றும் சமூக பண்பாட்டை எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக கங்கர், நுளம்பர், சோழர் மற்றும் விஜயநகரப் பேரரசு ஆகிய ஆட்சிக்காலங்களின் தாக்கத்தை வெளிப்படுத்தும் சான்றுகள் காணப்படுகின்றன. மேலும், மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சேர்ந்த வணிகக் குழு கல்வெட்டு, அப்பகுதியில் வணிக அமைப்புகள் சிறப்பாக இயங்கியதற்கான முக்கிய ஆதாரமாக விளங்குகிறது. நடுகற்களின் கலைப்பாணியில் நுளம்பர் மரபிலிருந்து சோழர் கலைப்பாணிக்கான மாற்றமும் தெளிவாகக் காணப்படுகிறது. இவ்வாய்வு, ஆனந்தூரில் காணப்படும் தொல்லியல் சான்றுகளை வரலாற்றுப் பார்வையில் ஆராய்ந்து, அவை வெளிப்படுத்தும் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு தகவல்களை எடுத்துரைக்கும் வகையில் அமைகின்றது.

**திறவுச்சொற்கள்:**

ஆனந்தூர், கிருஷ்ணகிரி, நடுகற்கள், நுளம்பர், சோழர், விஜயநகரப்பேரரசு, தொல்லியல், கலைப்பாணி, கல்வெட்டுகள்.

## 1.அறிமுகம்

தமிழக வரலாற்றை அறிந்து கொள்வதில் தொல்லியல் சான்றுகள் மிக முக்கியப் பங்கு வகிக்கின்றன. அவற்றுள் நடுகற்கள், கடந்த கால சமூகத்தின் வீரமரபு, அரசியல் நிகழ்வுகள், சமூக அமைப்பு மற்றும் கலைப்பாணி வளர்ச்சியை வெளிப்படுத்தும் முதன்மை வரலாற்று

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12032026*

ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.போரில் கால்நடை கவர்தல் மற்றும் மீட்டல்,ஊரைக்காத்தல் போன்ற செயல்களில் உயிர்நீத்த வீரர்களின் நினைவாக நிறுவப்பட்ட நடுகற்கள், அக்கால மக்களின் பண்பாட்டு மரபையும், நினைவுக் கலாச்சாரத்தையும் எடுத்துக்காட்டுகின்றன. நடுகல் என்பது வீரன் இறந்த இடத்திலோ அல்லது வேறு இடத்திலோ அவன் நினைவாக எடுக்கும் கல், 'நடுகல்' ஆகும். இதனை வீரக்கல் என்றும் அழைக்கின்றனர். பண்டையத் தமிழர்கள் வீரத்தைப் போற்றினார்கள். இவ்வீரர்கள் நினைவாக ஊர் மக்களோ, அரசனோ, தலைவனோ நடுகற்களை எடுத்தனர். கிருஷ்ணகிரி மாவட்டம், பெருங்கற்காலம் முதல் வரலாற்றுக் காலம் வரை தொடர்ச்சியான மனித வாழ்வையும் பண்பாட்டு வளர்ச்சியையும் சான்றுகளுடன் வெளிப்படுத்தும் சிறப்புமிக்க பகுதியாகும். இம்மாவட்டத்தில் அமைந்துள்ள ஆனந்தூர், பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த நடுகற்கள்,கல்வெட்டுகள் மற்றும் பிற தொல்லியல் சின்னங்களால் வரலாற்று முக்கியத்துவம் பெற்ற இடமாக விளங்குகிறது. ஆனந்தூர் பகுதியில் காணப்படும் நடுகற்கள் கங்கர், நுளம்பர், சோழர் மற்றும் விஜயநகர ஆட்சிக்கால வரலாற்றுச் சான்றுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. குறிப்பாக, 10-12 ம் நூற்றாண்டைச் சேர்ந்த நடுகற்கள் நுளம்பர் கலைப் பாணியிலிருந்து சோழர் கலைப்பாணிக்கு ஏற்பட்ட மாற்றத்தைத் தெளிவாகப் பிரதிப்பலிக்கின்றன. மேலும் விஜயநகரப் பேரரசு கால நடுகற்கள் அக்கால சமூகச் சூழலையும் எடுத்துரைக்கின்றன. அதோடு, மூன்றாம் குலோத்துங்க சோழன் கால வணிகக் குழு கல்வெட்டு, ஆனந்தூர் பகுதியின் வணிகச் செயல்பாடுகள் மற்றும் அரசியல் பொருளாதார நிலையை அறிய உதவும் முக்கிய சான்றாக அறிய உதவுகிறது. எனவே ஆனந்தூர் நடுகற்களை வரலாற்று மற்றும் தொல்லியல் நோக்கில் ஆராய்வதன் மூலம், அப்பகுதியின் அரசியல் மாற்றங்கள் கலைப் பாணி வளர்ச்சி, சமூக வாழ்க்கை, பொருளாதார அமைப்பு மற்றும் பண்பாட்டு மரபுகளை விரிவாக அறிய முடிகிறது. ஆனந்தூர் நடுகற்களின் வரலாற்றுப் பின்னணி, அவற்றின் காலம், கலைப்பாணி, கல்வெட்டுச் செய்திகள் மற்றும் அவை வெளிப்படுத்தும் வரலாற்றுச் செய்திகளை வெளிக்கொணர்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## 2.ஆனந்தூர் வரலாற்றுப் பின்னணியும் ஆட்சிகளும்

ஆனந்தூர் என்பது தமிழ்நாட்டின் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வட்டத்துக்கு உட்பட்ட ஒரு வருவாய் கிராமம் ஆகும். இப்பகுதி பண்டைய காலம் முதலே மனித வாழ்விடமாக விளங்கியதற்கான தொல்லியல் சான்றுகள் சுற்றுப் பகுதிகளில் காணப்படுகின்றன. இப்பகுதி சுற்றிலும் குன்றுகளும் விவசாய நிலங்களும் சூழ்ந்த இயற்கை எழில் சூழல் கொண்டது. இப்பகுதியின் முதன்மை நீர் ஆதாரமாக ஆனந்தூர் பெரிய ஏரி அமைந்துள்ளது. விவசாயமும், தொன்மை வரலாறும் இணைந்த ஒரு தனித்துவமான புவியியல் அமைப்பை ஆனந்தூர் கொண்டுள்ளது. "தமிழகத்தின் குன்றுகளும் காடுகளும் நிறைந்த ஒரு மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம். தமிழகத்தின் ஓரத்தில், ஆந்திர கர்நாடகா மாநில எல்லைகளை ஒட்டி அமைந்த இம்மாவட்டத்தை பிறமாநிலங்களுக்கானத் தமிழகப் பெருவழிகள் ஊடறுத்துச் செல்கின்றன.1965 – ல் சேலம் மாவட்டத்திலிருந்து தருமபுரி மாவட்டமும் 2004 – ல் தருமபுரி மாவட்டத்திலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டமும் பிரித்து உருவாக்கப்பட்டன." **(கிருஷ்ணகிரி மாவட்ட கல்வெட்டுகள், முனைவர்.சு,இராசகோபால், சா.கிருஷ்ணமூர்த்தி,பக்-2)** கிருஷ்ணகிரி மாவட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் முதல் பல அரசுகளின் எழுச்சியைக் கொண்ட பெருமைக்குரியது. பழங்காலம்,

புதிய கற்காலம் மற்றும் சிந்துவெளி நாகரிக காலத்தைச் சார்ந்த பாறை ஓவியங்கள். சின்னங்கள் இங்கு பெருமளவில் காணப்படுகின்றன. கிருஷ்ணகிரி மாவட்டம் வரலாற்று ரீதியாக கொங்கு மண்டலம் மற்றும் நுளம்பாடி (நுளம்பர் ஆட்சி) பகுதியுடன் தொடர்புடையது. "இப்பகுதியில் உள்ள கல்வெட்டுகளைக் கொண்டு இப்பகுதியின் நாட்டுப் பிரிவுகளை அறிய இயலும். கிருஷ்ணகிரி **"எயில் நாடு"** என்றும் , ஒசூர் **"முரசு நாடு"** என்றும் , ஊத்தங்கரை **"கோவூர் நாடு"** என்றும் அழைக்கப்பட்டன. சோழர் காலத்தில் இப்பகுதி **" நிகரிலி சோழ மண்டலம்"** என்றும் அழைக்கப்பட்டது. விஜயநகரப் அரசுகளின் வருகை **"சீர்மை"** என்னும் ஒரு புதிய பிரிவைக் கண்டது. **"குந்தாணிச்சீர்மை"** என்பது இவ்வாறு 16 ம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகும்.**"(தருமபுரி மாவட்ட கல்வெட்டுகள்(தொகுதி-1), ரா.நாகசாமி,பக்-5)** ஆனந்தூர் பகுதியானது வரலாற்றுச் சிறப்புமிக்க நடுகற்கள் மற்றும் தொல்லியல் சான்றுகள் நிறைந்த பகுதியாகும். இப்பகுதி 900 ஆண்டுகளுக்கு முன்பே **"ஆத்தூர்"** என்றப் பெயரில் அழைக்கப்பட்டதாகவும், அப்பகுதியில் உள்ள திரு தான்தோன்றீஸ்வரர் சிவன் கோவிலில் கண்டறியப்பட்ட 3-ம் குலோத்துங்க சோழனின் 15 –ம் ஆட்சியாண்டில் வெட்டப்பட்ட வணிககுழுக் கல்வெட்டு சான்றுகள் பகர்கின்றன. இப்பகுதி கங்கர், நுளம்பர், சோழர் மற்றும் விஜயநகரப் பேரரசு ஆகிய அரச வம்சங்களின் ஆட்சிக்குட்பட்ட பகுதியாகக் காணப்படுகிறது.

### 2.1 அரசியல் சூழல்

சங்க காலம் முதல் இடைக்காலம் வரை ஒரு நாட்டின் எல்லையை விரிவுப்படுத்துவற்கும், மற்றொரு மன்னனின் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கோ போர்கள் நடந்தன. "பண்டைக் காலத்தில் நாட்டின் வளர்ச்சியில் ஆநிரைகள் இன்றியமையாத இடம்பெறுவதால் நாட்டைக் கைப்பற்ற நினைக்கும் அரசன் அக்காலத்தில் ஆநிரை கவர்வது முதற்படியாகும்." **(சங்க இலக்கியங்களில் நடுகல் பற்றிய வகைப்பாடு, தே. பிருந்தாதேவி, பக்-4)** எனலாம். "ஆகோள் பூசல் சங்க காலத்தில் தமிழ்ச் சமூகத்தாரிடையே இடையறாத நடைப்பெற்ற மாட்டுச் சண்டையாகும். தொல்குடி நிலையில் ஆகோள் பூசல் என்பது வாழ்வியல் ஆதாரத்தை பெருக்கும் ஒரு வழியாகவும், வளமைக்காகவும், வீரத்திற்காகவும் நிகழ்த்தப்பட்டதாகும். தொல்லியல் சான்றுகளாக நமக்குக் கிடைக்கும் நடுகற்கள், நெடுங்கல், குத்துகற்கள் முதலியன ஆகோள் பூசலில் மாண்ட வீரர்களுக்காக வைக்கப்பட்டவையாக பெரும்பாலும் காணப்படுகின்றன. புலிமான் கோம்பை நடுகல் இதற்கு தக்க சான்றாகும். **"( தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம், கோ. சசிகலா,பக்-135)** மன்னர்கள் போர்களத்தில் தோற்று, நாடு கைமாறும் போது அல்லது தங்களின் மானத்தைக் காக்க உயிர் துறக்கும் போது அவர்களுக்கு நடுகற்கள் எடுக்கப்பட்டன. ஆனந்தூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் பல நூற்றாண்டுகளாகவே, பல்வேறு பேரரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்துள்ளதை அறியமுடிகின்றது. "பல்லவர்கள், நுளம்பர்கள், சோழர்கள் மற்றும் விஜயநகரப் பேரரசுகள் போன்ற பல மன்னர்களின் ஆட்சிக் காலத்திலும் இப்பகுதி ஒரு முக்கிய போர்க்களமாக இருந்துள்ளது. ஆரம்பத்தில் இப்பகுதியை ஆண்ட கங்கர்களை தோற்கடித்து, நுளம்பர்கள்**(கி.பி 10 நூற்றாண்டு வரை)**ஆட்சி செய்தனர். அதற்கு பின்பு சோழர்கள் கி.பி 11 ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ராஜராஜசோழன் மற்றும் அவரது வாரிசுகளின் படையெடுப்பால் நுளம்பர்களின் ஆட்சி முடிவுக்கு வந்தது." **(தருமபுரி கல்வெட்டுகள் (தொகுதி-1),இரா. நாகசாமி, பக்- 3)** மேலும் இப்பகுதி எல்லைப் பகுதியாக இருந்ததால் அடிக்கடி ஆட்சி

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12032026*

மாற்றங்களைச் சந்தித்தது. இப்பகுதியைக் கைப்பற்ற வெவ்வேறு நூற்றாண்டுகளில் பல்வேறு அரசுகளுக்கிடையே போர்கள் நடைபெற்றதால், வெவ்வேறு காலகட்டங்களில் வீரமரணமடைந்த வீரர்களுக்குத் தனித்தனியாக சிற்ப வடிவமைப்பு மற்றும் எழுத்து முறைகளுடன் நடுகற்கள் நிறுவப்பட்டன.

**3.ஆனந்தூரில் காணப்படும் நடுகற்கள்**




ஆனந்தூரில் மூன்று அரிய நடுகற்கள் சமீபத்திய கள ஆய்வில் பதிவு செய்யப்பட்டுள்ளன. கிருஷ்ணகிரி வரலாற்று ஆய்வு மற்றும் ஆவணப்படுத்தும் குழு , கிருஷ்ணகிரி அரசு அருங்காட்சியகம் மற்றும் முனைவர் பட்ட ஆய்வு மாணவியாகிய நான் இவர்களுடன் இணைந்து, கள ஆய்வில் ஆனந்தூர் பகுதியில் நடுகற்களை கண்டறிந்தோம். இவை தமிழக நடுகல் வரலாற்று ஆய்விற்கு முக்கிய ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன.

தமிழகத்தின் தொன்மையான தமிழி எழுத்துடன் கூடிய நடுகற்கள் தேனி மாவட்டம், புலிமான்கோம்பை மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், பொற்பனைக்கோட்டை போன்ற இடங்களில் கண்டறியப்பட்டிருந்தாலும் அவைகளில் உருவங்கள் இல்லை. வீரர்களின் உருவங்களோடு கூடிய நடுகற்கள் தமிழகத்தின் செங்கம்,ஊத்தங்கரை மற்றும் அரூர் ஆகிய பகுதிகளில்தான் அதிக அளவில் காணப்படுகின்றன. இவையாவும் வட்டெழுத்துடன் கூடிய நடுகற்கள். இவை பெரும்பாலும் கனம் குறைந்த கற்பலகைகளிலும் உருவங்கள் ஆழம் அதிகம் இல்லாமலும் முகம் மற்றும் கால்கள் பக்கவாட்டில் இருக்கும் படியும் ஒரு கையில் வில் மற்ற கையில் அம்பு அல்லது கத்தி இருக்குமாறும் வடிக்கப்பட்டிருக்கும். சுமார் 6 –ம் நூற்றாண்டு முதல் 9 – ம் நூற்றாண்டு வரையிலான நடுகற்கள்பொதுவாக இப்படித்தான் அமைந்திருக்கும். **இதனை நாம்**

| Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 03 (August-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

**கங்கர், நுளம்பர் பாணி என்று குறிப்பிடலாம்.**

அதன் பின் சோழர்கள் இப்பகுதியை கைப்பற்றி ஆண்டபோது நடுகற்களின் வடிவம் மாறுபாடு அடைகிறது. அதாவது வீரன் முகம் நேராக நம்மைப் பார்த்தவாறும் உடல் நேராகவும் கால்கள் மட்டும் நடந்து செல்வது போலவும் காட்டப்பட்டிருக்கும். கைகளில் வில், கத்தி, அம்பு, கேடயம் போன்ற ஆயுதங்கள் இருக்கும். உருவங்கள் பெரிதாகவும் நன்கு புடைப்புடனும் வடிக்கப்பட்டிருக்கும். சிலவற்றில் கீழே கால்நடைகளை அல்லது ஊர்வல காட்சியோ காட்டப்பட்டிருக்கும். மேல் பகுதியில் வீரனை தேவதைகள் சொர்க்கத்திற்குச் தூக்கிச் செல்வது போல் காட்டப்பட்டிருக்கும் **இது, சோழர் கலைப்பாணி என்று குறிப்பிடலாம்.** இதுவே விஜயநகர காலத்தில் சொர்கத்துக்குச் செல்லும் காட்சி இடம்பெறாமல் இறந்த வீரன் மேலுலகத்தில் சிவலிங்கம் அல்லது பெருமாளை வழிபடுவது போன்று இருக்கும். **இது விஜயநகர கலைப்பாணி என்று குறிப்பிடலாம்.**


கிருஷ்ணகிரி மாவட்டம், ஆனந்தூரில் கண்டறிந்துள்ள 3 நடுகற்களும் நுளம்பர் கலைப்பாணியிலிருந்து சோழர் கலைப்பாணிக்கு மாறியதை தெரிந்து கொள்ள உதவும் நடுகல்லாகும்.

**முதல் நடுகல் :**



இந்நடுகல் நுளம்பர் கலைப் பாணியிலிருந்து சோழர் கலைப் பாணிக்கு மாறியதை தெரிந்து கொள்ள உதவும் நடுகல்லாகும். வீரன் முகம் மற்றும் கால்கள் பக்கவாட்டில் காணப்படுகின்றது. ஒரு கையில் வில் மற்றும் மறுகையில் அம்பு காணப்படுகிறது. இந்நடுகல் காலம் 10- ம் நூற்றாண்டு எனலாம்.

**இரண்டாவது நடுகல் :**



**இந்நடுகல் கீழ் வரையப்பட்டுள்ள கோட்டுருவம்**

இந்நடுகல் 10 –ம் நூற்றாண்டில் நடுகற்களின் வடிவம் எப்படி மாறுபாடு அடைகிறது என்பதை

| Copyright © Author(s)

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 12, Issue 03 (August-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm12032026*

தெரிந்து கொள்ள உதவுகிறது. முதல் நடுகல் போலவே கால்கள் பக்கவாட்டிலும், ஒரு கையில் வில் மற்றும் மறு கையில் அம்பு போன்று காட்டடப்பட்டிருந்தாலும் முகம் மட்டும் நேராக காட்டடப்பட்டுள்ளது. 10 -ம் நூற்றாண்டின் இறுதி காலகட்டத்திலிருந்து 11 –ம் நூற்றாண்டின்(சோழர் ஆட்சி) தொடக்கத்தின் கலைப் பாணி வளர்ச்சியை எடுத்துரைக்கின்றது. இந்நடுகல்லின் கீழே கோட்டுருவம் வரையப்பட்டுள்ளது. அதில் வீரன் ஒருவன் கையில் வில் வைத்து கொண்டிருக்கிறான். அதன் அருகே குதிரை ஒன்று தலை குனிந்த நிலையில் உள்ளது. குதிரை தலை குனிந்த நிலையில் காட்டடபட்டிருப்பது வீரனின் மரணத்தைக் குறிக்கின்றது. மற்றும் போர்களம் போன்ற குறியீடு காணப்படுகிறது. இந்த கோட்டுருவத்தில் காணப்படும் வீரன் போலவே மேலே நடுகல்லில் வீரனின் சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. எனவே நடுகல்லில் வீரனின் சிற்பம் செதுக்கப்படுவதற்கு முன்பு கோட்டுருவம் வரைந்துள்ளனர்.

**மூன்றாவது நடுகல் :**



இந்நடுகல் நன்கு வளர்ச்சியடைந்த சோழர்கால நடுகல்லாகும். இதன் காலத்தை இங்கு காணப்படும் மூன்றாம் குலோத்துங்கனின் காலமான அதாவது, 12 –ம் நூற்றாண்டு என்று கூறலாம். வீரன் நன்கு புடைப்பாக நம்மைப் பார்த்த முகத்தோடும் கால்கள் திரும்பியும் நிற்கிறார்.காலுக்கு கீழே இரண்டு மாடுகள் காட்டடப்பட்டுள்ளன. இது அந்த வீரன் கவர்ந்து சென்ற மாட்டினை மீட்கும் சண்டையில் இறந்துப்போனான் என்பதைக் குறிப்பிடுகிறது. கூடவே ஒரு குதிரையும் தலைகுனிந்து செல்வது போல் காட்டடப்பட்டுள்ளது. மேலும் வீரனுக்கு வலது புறம் ஒரு பெண் குடை பிடித்து நிற்பது போல் சிறிய அளவில் காட்டடப்பட்டுள்ளது. குதிரையும் குடையும் இவன் ஒரு தலைவன் என்பதைக் குறிப்பிடுகின்றன. வீரனுக்கு இடதுபுறம் ஒரு வீரன் விழுந்து கிடப்பது போல் சிறிய அளவிலும் காட்டடப்பட்டுள்ளது. அதேபோல வீரனின் கால் பகுதியிலும் ஒரு வீரன் விழுந்து கிடக்கிறான். அவன் உடலை ஒரு ஈட்டி துளைத்துச் செல்வது போல் உள்ளது. எனவே இறந்த தலைவன் தான் இறக்கும் முன்பு நடந்த சண்டையில் இருவரை கொன்றிருக்கிறான் என்று தெரிகிறது. மேல் பக்கம் இறந்த வீரனை இரண்டு தேவலோக மகளிர் சொர்க்கத்துக் கூட்டிச் செல்வது போல் காட்டடப்பட்டுள்ளது. போரில் இறந்த வீரன் சொர்கத்துக்குச் செல்வான் என்பது சங்க காலத்திலிருந்தே இருந்து வந்த மக்களின் நம்பிக்கையாகும். எனினும் இது நடுகல் சிற்பத்தில் சோழர் காலம் முதலே காட்டடப்படுகிறது. எனவே இது ஒரு சோழர்கால நடுகல்லுக்கு சிறந்த உதாரணமாகும்.

இதனோடு ஆனந்தூரிலிருந்து தருமபுரி அருங்காட்சியகத்திற்கு கொண்டுச் சென்று காட்சிப்படுத்தியுள்ள நடுகற்களையும் காணலாம். அவை நடுகல் வளர்ச்சியின் மூன்றாம் கட்ட

வளர்ச்சியான விஜயநகர கால நடுகல்லுக்கு இலக்கணமாய் அமைந்துள்ளன. இப்பகுதி முல்லை நிலப்பகுதியான காடும் காடு சார்ந்த பகுதியாக இருந்ததால் மக்கள் வளர்க்கும் கால்நடைகளை இரையாக்கிக் கொள்ள புலிகள் வருவது இயல்பே. அப்படி ஒரு நேரத்தில் ஊரையும் கால்நடைகளையும் காக்கும் பொருட்டு வீரன் ஒருவன் புலியுடன் போராடி இறந்துள்ளான். “இந்நடுகல் அளவில் மிகப் பெரியது. வீரனின் முன்பாக புலி ஒன்று பாய்ந்த நிலையில் உள்ளது. வீரன் இருகைகளாலும் பிடித்துள்ள ஈட்டியால் அப்புலியைக் குத்துகிறான். அந்த ஈட்டியின் முனை புலியின் உடலில் பாய்ந்து மறுபுறம் வெளியேறும் காட்சி தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளது. வீரனது இடையில் கச்சையும் வாளும் உள்ளன. அவன் வீரம் மற்றும் கம்பீரத்தை காட்டும் விதமாக புலியின் முன்னும் பின்னுமாக இரண்டு வேட்டை நாய்களும் காட்டப்பட்டுள்ளன.இந்தச் சிற்பத்தின் இடதுப்புறத்தில் சிதைந்த நிலையிலான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இந்தச் சண்டையில் புலியும் புலியுடன் போராடிய வீரனும் இறந்துள்ளான். ஊரையும் கால்நடைச் செல்வங்களையும் பாதுகாக்க உயிரை விட்டதால் அவனுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது**. தருமபுரி மாவட்ட கல்வெட்டுகள்(தொகுதி-2), இரா.நாகசாமி, பக்- 72).** இதற்கு புலிகுத்திப்பட்டான் நடுகல் எனப் பெயர் வழங்கப்பட்டது.

**ஆனந்தூர் நடுகற்களின் விவரங்கள்**

| **நடுகல் வகை** | **காலம் / கலைப்பாணி** | **முக்கிய சிறப்பம்சங்கள்** |
|---|---|---|
| **முதல் நடுகல்** | 10-ஆம் நூற்றாண்டு. நுளம்பர் கலைப் பாணியிலிருந்து சோழர் கலைப் பாணிக்கு மாறிய காலம். | வீரன் முகம் மற்றும் கால்கள் பக்கவாட்டில் காணப்படுகின்றது. ஒரு கையில் வில்லும் மறுகையில் அம்பும் காணப்படுகிறது. |
| **இரண்டாவது நடுகல்** | 10-ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கம் (சோழர் ஆட்சி). | கால்கள் பக்கவாட்டிலும் முகம் நேராகவும் காட்டப்பட்டுள்ளது. நடுகல்லின் கீழே வில் ஏந்திய வீரன் மற்றும் மரணத்தைக் குறிக்கும் வகையிலான தலைகுனிந்த குதிரையின் கோட்டுருவம் வரையப்பட்டுள்ளது. |
| **மூன்றாவது நடுகல்** | 12-ஆம் நூற்றாண்டு (மூன்றாம் குலோத்துங்கன் காலம்). நன்கு வளர்ச்சியடைந்த | வீரன் நன்கு புடைப்பாக நம்மைப் பார்த்த முகத்தோடு நிற்கிறார். ஆனிரை மீட்டலைக் குறிக்கும் வகையில் கீழே இரண்டு மாடுகள் |

| Copyright © Author(s)

| நடுகல் வகை | காலம் / கலைப்பாணி | முக்கிய சிறப்பம்சங்கள் |
|---|---|---|
| | சோழர்கால பாணி. | காட்டப்பட்டுள்ளன. தலைவன் என்பதைக் குறிக்க குடை பிடித்த பெண் மற்றும் குதிரை உருவங்களும், இறந்த வீரனை தேவதைகள் சொர்க்கத்திற்கு அழைத்துச் செல்லும் காட்சியும் இடம்பெற்றுள்ளன. |
| **புலிகுத்திப்பட்டான் நடுகல்** | விஜயநகர கால கலைப்பாணி. (தற்போது தருமபுரி அருங்காட்சியகத்தில் உள்ளது). | வீரன் ஈட்டியால் புலியைக் குத்துவது தத்ரூபமாகச் செதுக்கப்பட்டுள்ளது. கம்பீரத்தைக் காட்ட வேட்டை நாய்களும் காட்டப்பட்டுள்ளன. 'வெள்ளான்' என்ற வீரன் புலியுடன் போராடி இறந்துள்ளதை உணர்த்தும் முற்றுப்பெறாத கல்வெட்டு காணப்படுகிறது. |

**கல்வெட்டு விளக்கம் :**

வெள்ளான் என்ற வரி மட்டும் காணப்படுகின்றது. எனவே, வெள்ளான் என்ற வீரன் புலியுடன் போராடி புலியைக் கொன்று தானும் இறந்துள்ளான். என்றச் செய்தியை மட்டும் அறிய முடிகின்றது. முற்றுப் பெறாத கல்வெட்டாகும்.

கல்வெட்டின் இறுதி இரண்டு வரிகள் தொடக்கப் பகுதியில் மாறி இடம் பெற்றுள்ளதாலும், எழுத்துக்கள் சிதைந்துள்ளதாலும் வீரனைப் பற்றிய செய்திகள் தெளிவாக அறிய இயலவில்லை.

**அமைவிடம் :** தருமபுரி அருங்காட்சியகம்





**புலிகுத்திப்பட்டான் நடுகல்**

**சோழர்கால வணிக குழு கல்வெட்டு**

ஆனந்தூரில் 1000 ஆண்டு பழமையான திரு தான்தோன்றீஸ்வரர் கோயில் உள்ளது. அக்கோயிலின் அருகே மண்ணுள் புதைந்துக் கொண்டிருந்த கல்வெட்டினை உலகத் தமிழாராய்ச்சி

நிறுவனத்தின் தொல்லியல் மற்றும் கல்வெட்டியல் மாணவர்கள் கண்டெடுத்தனர். இக்கல்வெட்டு 4 அடி அகலமும், 5 அடி உயரமும் கொண்ட கல்லில் குலோத்துங்க சோழன் காலத்தைச் சேர்ந்த சித்திரமேழி பெரியநாட்டார் என்ற பெரு வணிகக் குழுவினரால் கட்டப்பட்ட திரு தான்தோன்றீஸ்வரர் சிவன் கோயிலுக்கு பொன்னை தானமாக வழங்கியுள்ளதை இந்த கல்வெட்டு குறிப்பிடுகிறது.



**வணிகக் குழு கல்வெட்டு**

மேலும் இந்த கல்வெட்டை சேதப்படுத்துவோர் பசுவைக் கொன்ற பாவத்துக்கு ஆளாவர் என்ற செய்தியுடன் 13 வரிகளில் காணப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அருகே உள்ள தாமரைப்பாக்கம் அக்னீஸ்வரர் கோயிலைக் கட்டிய அதே வணிகக் குழுதான் இவர்கள் என்பதை ஓய்வுப்பெற்ற தொல்லியல் ஆய்வறிஞர் ரா. பூங்குன்றன் உறுதிப்படுத்தினார். இதன் மூலம் திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி பகுதிகளில் இந்த வணிக குழு அதிக அளவில் இருந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது. இந்த கல்வெட்டின் மேல் பகுதியில் திருமகள் உருவமும், வலது இடது புறங்களில் முறையே சூலம் மற்றும் கத்தி உள்ளிட்ட ஆயுதங்களும் உள்ளன. கல்வெட்டு மெய்கீர்த்தி மற்றும் செய்தி அடிப்படையில் இது குலோத்துங்க சோழனின் 15- வது ஆட்சியாண்டு என்பதை அறிய முடிகின்றது. 900 ஆண்டுகள் கடந்த பின்னரும் இந்த ஊர் மற்றும் கடவுளின் பெயர் கல்வெட்டில் உள்ளவாறே இன்றும் புழக்கத்தில் உள்ளது சிறப்பான ஒன்றாகும் **(தினமணி செய்தித்தாள், நவம்பர் 2025 )** எனவே,ஆனந்தூர் பகுதியானது ஒரு முக்கிய வரலாற்று மற்றும் வணிக மையமாக இருந்ததை காட்டுகின்றன.

**ஆனந்தூர் கல்வெட்டு விவரங்கள்**

| **கல்வெட்டின் பெயர்** | **காலம் / அரசன்** | **வரலாற்றுச் செய்திகள்** |
|---|---|---|
| **வணிகக் குழு கல்வெட்டு** | மூன்றாம் குலோத்துங்க சோழனின் 15-வது ஆட்சியாண்டு. | திரு தான்தோன்றீஸ்வரர் சிவன் கோயிலுக்கு 'சித்திரமேழி பெரியநாட்டார்' என்ற பெரு வணிகக் குழுவினர் பொன்னை தானமாக வழங்கியதை இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. |
| **அமைப்பு** | 1000 ஆண்டு | 4 அடி அகலமும், 5 அடி உயரமும் கொண்டது. |

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12032026*

| கல்வெட்டின் பெயர் | காலம் / அரசன் | வரலாற்றுச் செய்திகள் |
|---|---|---|
| மற்றும் குறியீடுகள் | பழமையானது. | இதன் மேல் பகுதியில் திருமகள் உருவமும், இருபுறமும் சூலம் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டைச் சேதப்படுத்துவோர் பசுவைக் கொன்ற பாவத்துக்கு ஆளாவர் என்ற செய்தி 13 வரிகளில் காணப்படுகிறது. |

**முடிவுரை**

ஆனந்தூரில் காணப்படும் நடுகற்கள் அப்பகுதியின் வரலாறு, அரசியல் மாற்றங்கள், சமூக அமைப்பு மற்றும் கலை வளர்ச்சி ஆகியவற்றை வெளிப்படுத்தும் அரிய தொல்லியல் ஆவணங்களாகத் திகழ்கின்றன. இப்பகுதியில் காணப்படும் நடுகற்கள், கங்கர்- நுளம்பர் ஆட்சிக் காலக் கலைப் பாணியிலிருந்து சோழர் பாணிக்கும், பின்னர் விஜயநகரப் பேரரசு காலக் கலைப்பாணிக்கும் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியை தெளிவாக சுட்டிக்காட்டுகின்றன. சிற்ப அமைப்பு, வீரர்களின் உருவ வடிவம், ஆயுதங்களின் சித்தரிப்பு, கல்வெட்டு எழுத்து வடிவம் ஆகியவை காலந்தோறும் ஏற்பட்ட அரசியல் மற்றும் கலை மாற்றங்களை அறிய முக்கிய ஆதாரங்களாக அமைகின்றன. மேலும் மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தைச் சார்ந்த வணிகக் குழு கல்வெட்டு போன்ற சான்றுகள், ஆனந்தூர் ஒரு வீர மரபு மட்டுமின்றி வணிகம், நிர்வாகம் மற்றும் சமூக வளர்ச்சியிலும் முக்கிய இடம் பெற்றிருந்ததை உணர்த்துகின்றன. இதன் மூலம் ஆனந்தூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்றிருந்தது என்பதை உறுதிப்படுத்த முடிகிறது. இவ்வாய்வு நடுகற்களை நினைவுச் சின்னங்களாக மட்டுமல்லாமல், வரலாற்றை மீட்டெடுக்கும் முதன்மைச் சான்றுகளாக அணுக வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

**துணைநூற்பட்டியல்**

[1.] பிருந்தாதேவி, தே. "சங்க இலக்கியங்களில் நடுகல் பற்றிய வகைப்பாடு." *களஞ்சியம் சர்வதேச தமிழ் ஆய்விதழ்*, தொகுதி 2, இதழ் 4, நவம்பர் 2023.

[2.] "ஆனந்தூரில் குலோத்துங்க சோழன் காலத்து வணிகக் குழுவின் கல்வெட்டு கண்டெடுப்பு." *தினமணி*, 27 நவம்பர் 2025, www.dinamani.com/latest-news/sub-latest-news/2025/Nov/27/kulothunga-chola-era-trading-group-inscription-discovered-in-anandur.

[3.] இராசகோபால், சு., மற்றும் சா. கிருஷ்ணமூர்த்தி. *கிருஷ்ணகிரி மாவட்ட கல்வெட்டுகள்*. தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2007.

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm12032026*

[4.] சசிகலா, கோ. *தொல்லியல் நோக்கில் சங்ககால சமூகம்*. சிந்தன் புக்ஸ், 2019.

[5.] நாகசாமி, ரா. *தருமபுரி மாவட்ட கல்வெட்டுகள்*. தொகுதி 1, தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை, 1975.

[6.] ---. *தருமபுரி மாவட்ட கல்வெட்டுகள்*. தொகுதி 2, தமிழ்நாடு அரசு தொல்பொருள் துறை, 1975.

**References**

[1.] Biruntha Devi, T. "Classification of Hero Stones in Sangam Literature." *Kalanjiyam International Tamil Research Journal*, vol. 2, no. 4, Nov. 2023.

[2.] "Kulothunga Chola Era Trading Group Inscription Discovered in Anandur." *Dinamani*, 27 Nov. 2025, www.dinamani.com/latest-news/sub-latest-news/2025/Nov/27/kulothunga-chola-era-trading-group-inscription-discovered-in-anandur.

[3.] Nagasamy, R. *Inscription of Dharmapuri District*. Vol. 1, Tamilnadu State Department of Archaeology, 1975.

[4.] ---. *Inscription of Dharmapuri District*. Vol. 2, Tamilnadu State Department of Archaeology, 1975.

[5.] Rasagopal, S., and S. Krishnamoorthi. *Inscription of Krishnagiri District*. Department of Archaeology, Government of Tamilnadu, 2007.

[6.] Sasikala, K. *Sangam-Age Society from an Archaeological Perspective*. Chinthan Books, 2019.

### முரண்பாட்டுப் பிரகடனம் (Declaration of Conflict of Interest)

இவ்வாய்வுக் கட்டுரையின் ஆசிரியர் என்ற முறையில், கட்டுரை உருவாக்கத்திலோ, அதன் பகுப்பாய்வு முடிவுகளிலோ அல்லது வெளியிடப்படும் தரவுகளிலோ எவ்விதமான நிதிசார்ந்த பின்னணியோ அல்லது தனிப்பட்ட முரண்பாடோ இல்லை என்று உறுதிபடப் பிரகடனப்படுத்துகிறேன்.

Tamilmanam